தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஹேவிளம்பி, பங்குனி 7, திருவள்ளுவர் ஆண்டு 2049

2018 மார்ச் 21, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே

செல்லும்வா யெல்லாம் செயல்.”

செய்யக்கூடிய அளவு, செய்யக்கூடிய முறையில், செல்லும் வழியிடங்களில் எல்லாம் இடைவிடாது அறத்தைப் போற்றிச் செய்யவேண்டும்.

1. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 61, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. நீதிபதி, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

61—

உயர்நிலைப் பள்ளி

***2048—திரு. பா. நீதிபதி:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டியில் மாணவிகளுக்கென புதிய உயர்நிலைப் பள்ளி துவக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

[2018 மார்ச் 21

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டியில் மாணவிகளுக்காகப் புதிய உயர்நிலைப் பள்ளி துவங்கப்படுமா என்ற கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. அதாவது, அரசு மேல்நிலைப் பள்ளியிலிருந்து மகளிரைப் பிரித்து, தனியாக அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி அமைக்க வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. அந்த அரசு மேல்நிலைப் பள்ளியிலிருந்து மகளிரைப் பிரித்து தனியாக உயர்நிலைப் பள்ளி அமைக்க அந்தப்பள்ளி தற்போது அரசு விதிகளை நிறைவு செய்யவில்லை. அரசு விதிகளுக்குட்பட்டு இருக்குமேயானால், அதை இந்த ஆண்டு அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. நீதிபதி அவர்கள்.*

திரு. பா. நீதிபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழும் காலங்களிலே மனித தெய்வமாக வாழ்ந்து, இன்றைக்கும் அனைவருடைய உள்ளங்களிலும், இல்லங்களிலும் தெய்வமாக வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய மனித புனிதர் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எழுச்சிமிகு தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். உசிலம்பட்டியில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி அமைப்பதற்கு பரிசீலனை செய்யப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கு என் தொகுதி மக்களின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

சென்ற ஆண்டு, என்னுடைய உசிலம்பட்டி தொகுதியிலே, துள்ளுக்குட்டிநாயகனூரில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திக் கொடுத்தமைக்கு எனது தொகுதி மக்களின் சார்பாக மீண்டும் ஒரு முறை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த ஆண்டு, 100 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 100 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரமுயர்த்தப்படும் என்ற ஒரு இனிப்பான

2018 மார்ச் 21]

செய்தி நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தவகையிலே, என்னுடைய தொகுதியில், டி. கிருஷ்ணாபுரத்தில் உள்ள அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தருவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் இந்த ஆண்டு உயர்த்துவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும், பள்ளிக் கல்வித் துறைக்கு நிதிகளை வழங்கியிருக்கிறார்கள். தற்போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், டி. கிருஷ்ணாபுரத்தில் உள்ள பள்ளியைத் தரமுயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டார்கள். "கேட்டதைக் கொடுப்பவனே கிருஷ்ணா, கிருஷ்ணா" என்று சொல்வார்கள். அதற்கேற்ப, இந்த ஆண்டு அந்தப் பள்ளி தரம் உயர்த்தித் தரப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. நீதிபதி அவர்கள்.

திரு. பா. நீதிபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது தொகுதி மக்களின் சார்பாக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. இராதாமணி அவர்கள்.

திரு. கு. இராதாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான விக்கிரவாண்டியில், விக்கிரவாண்டி பேரூராட்சியில் ஒரு நூலகக் கட்டடம் இருக்கிறது. அது மிகவும் பழமைவாய்ந்த நூலகம். கேள்விக்குறியாக இருந்த அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகத்திற்கு 5 கோடி ரூபாய் ஒதுக்கி,

புத்தொளி பாய்ச்சிய மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், இந்த விக்கிரவாண்டி நூலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டுகிறேன். அதேபோல, அந்த நூலகத்தைச் சுற்றி இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் நான்கு தனியார் பொறியியல் கல்லூரிகளும், இரண்டு நர்சிங் கல்லூரிகளும், இரண்டு Polytechnic கல்லூரிகளும் எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு மருத்துவக் கல்லூரியும் இருக்கின்றன. ஆகவே, அந்த மாணவர்களெல்லாம் வசதியாகப் படிப்பதற்கும், தரமான உயர் கல்வி பெறுவதற்கும் வாய்ப்பாக நிறைய புத்தகங்களை வழங்குவதோடு, அங்கு புதிய கட்டடங்களையும் கட்டித் தர மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விக்கிரவாண்டியைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். விக்கிரவாண்டி என்றால் கூடுவிட்டு கூடு பாய்கிற நிலை. அதைப்போல, உங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து 25 இலட்சம் ரூபாய் மற்றும் நூலகத் துறையின் மூலமாக 25 இலட்சம் ரூபாய் வழங்கி, இந்த ஆண்டே அதைப் புதிய கட்டடமாக மாற்றி அமைக்க அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ராமர் அவர்கள்.

திரு. எ. ராமர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை தொகுதி, தோகைமலை ஒன்றியம், பாதிரிப்பட்டியில் உள்ள நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

2018 மார்ச் 21]

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கோரிக்கை அரசினுடைய விதிமுறைகளுக்கு உட்பட்டு இருக்குமேயானால், இந்த ஆண்டு அதுபற்றி பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 62, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

62—

புதைவட மின் கம்பி

***12818—திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழிங்கநல்லூர் தொகுதி, 192-வது வட்டம், நீலாங்கரை, சிங்காரவேலர் நகர் பகுதியில் மேலே செல்லும் மின் கம்பிகளை புதைவடங்களாக மாற்றியமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய பகுதி மட்டுமல்லாமல், சென்னை பகுதி முழுவதற்குமே, மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கின்றபோது, மேலே செல்லும் மின் கம்பிகள் அனைத்தையும் புதைவடங்களாக மாற்ற வேண்டும் என்று எங்களுக்கு ஆணையிட்டிருந்தார்கள். அதனடிப்படையில் மத்திய அரசோடு பேசி, இதற்காக 2,567 கோடி ரூபாய் நிதியுதவியும் பெற்றிருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற சிங்காரவேலர் நகர் பகுதியில் மின் கம்பிகளை படிப்படியாக புதைவடங்களாக மாற்றித் தர மாண்புமிகு அம்மா அவர்களின்